

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (22.7.2024) சென்னை, வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான பயன்படுத்தாத பழைய பொது பண்டகசாலை இடத்தினை வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வடசென்னை மக்களின் வளர்ச்சிக்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் புதிய திட்டங்களை செயல்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு களஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர் ஸ்ரீராமுலு, சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் ஸ்ரீதரன், நீர்வள ஆதாரத்துறை செயற்பொறியாளர் (பணிமனை & பண்டகசாலை) ஆசம் பாஷா, மண்டல அலுவலர் தமிழ்ச்செல்வன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், (22.07.2024) நேற்று, சென்னை கிண்டியில் காலை நடைபயிற்சி மேற்கொண்டு இருந்தபோது, தெருவோரம் காகிதம் எடுத்து பிழைக்கும் திருச்சியை சேர்ந்த ராஜா என்பவரை அவருடைய வாகனத்திலே தம்முடைய இல்லத்திற்கு அழைத்துச் சென்று உடை மற்றும் உணவு வழங்கி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மருத்துவ பரிசோதனை செய்து, மருத்துவமனையில் தற்காலிக அடிப்படையில் ரூ.12,000 மாத சம்பளத்தில் மருத்துவமனை பணியாளராக பணி வழங்க உத்தரவிட்டார்.

### கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி தலைமை ! ஐட்ரீம். மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

# இராயபுரம் பகுதி முன்னாள் செயலாளர் கட்பீஸ்.அ.பழனி 5ஆம் ஆண்டு நினைவு நாள் ! நலஉதவிகள் !

## அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ வழங்கினர்!

சென்னை ஜூலை: 23

சென்னை வடக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் இராயபுரம் பகுதி முன்னாள் செயலாளர் கட்பீஸ்.அ.பழனி அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு (21.07.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை பாலு தெருவில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கட்பீஸ். ப.சோமசுந்தர மூர்த்தி தலைமையில் ஐட்ரீம்.ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ,பகுதி செயலாளர்கள்: இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், ஆகியோர் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது. லயோலா.கே.மதன், இர.பொன்இளவரசன், வை.கௌதமன், இ.ரவிகுமார், எல்.சீனிவாசன், ஆகியோர் வரவேற்றனர். இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் தா.இளையஅருணா எம்.சி, இரா.மதிவாணன், பி.டி.பாண்டிசெல்வம், ந.மனோகரன், எஸ்.ஆர்.கமலகண்ணன், மு.கோபி, க.நாகம்மை, வி.தயாளன், நேதாஜி.யு.கணேசன் எம்.சி, வே.சிவக்குமார், நா.சண்முகம், கி.ராஜேந்திரன், என்.மருதுகணேஷ், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, வண்ணை புகாரி, வெ.சு.சத்தியநாராயணன், ஏ.டி.மணி, லயன். எம்.தீனதயாளன், க. கோவிந்தசாமி, ஏ.ரமேஷ் பாபு, ஜெ.கே.நாதன், கார்த்திக் செங்குட்டுவன், லட்சுமிவேலு, விமலாமோகன், எஸ்.எம்.பரசுராமன், பா.வேளாங்கண்ணி எம்.சி, த.ஜெயபாலன், பி.சேகர்,கு.சுந்தர், எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், சு.திருஞானம், வே.மலையம்மாள், இ.மதன், ஆர்.டி.ராஜா, கே.பாலு, இராயபுரம்.சு.சேகர், எஸ்.பி.எஸ்.புத்தன், எம்.எம்.சாமி, எரிமலை பாலு, பொன்.லட்சுமிசிவகுரு, என்.ஏழுமலை, வண்ணை. இ.மூர்த்தி, ஜி.சதீஸ்குமார், எல்.சீனிவாசன், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன், க.கோவிந்த ராஜ், பி.கண்ணன், இரா.பாலன், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர்.பி.முருகன், பாலா லட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், ப.குமார், பொ.து.ராஜா, எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், க.கலைசெல்வன், வி.குமார், அத்தோ. பி.முனுசாமி, எஸ்.சுரேஷ், ஐசிஎப்.பழனி, எஸ்.யுவராஜ், இரா.பொன்முடி, எம்.பாலாஜி, ஆர்.டி.ஜெய்சங்கர், எஸ்.முகமது மொய்தீன், வி.முத்து, ப. ஆ.சண்முகம், எம்.டி.மதன்ராஜ், மோ.ரவிகுமார், சு.சசிதரன், எஸ்.கே.இளங்கோ, ஆர்.குருவம்மா ள், ஜெ. பிரேம் ஆனந்த், ஆர்.பரந்தாமன், டி.கருணாகரண், யு.அனிபா, கோ .ஹரிராமன், டி.ஜனார்த்த னன், எஸ்.மணிகண்டன், எம்.டில்லி பாபு, சீமென்.கே.ரங்கராஜ், ஆ. ஆனந்தன், பி.பிரபாகரன், ஒலி ஒளி ஆ.பாபு, ர.இம்ரான், கே.சிவதனுஷ், ஜெ.தரணிதரண், க.பொம்முராஜ், குமரன், எம்.எம்.சந்துரு, எஸ்.கே.செந்தில்குமார், ஆர்.பிருந்தா, என்.அப்துல்மாலிக், மூ.வினோத்குமார், நா.அறிவுசெல்வன், ஏ.சாந்தகுமார், செல்வம், ஜி.விக்கி, ஏ.வெங்கடேஷ், ஏ.குமார், எம்.சௌந்தர பாண்டியன், ஏ.ஜீலியன், எஸ்.எஸ்.சங்கர், வி.பிரேம் குமார், ஆர்.தங்கராஜ், கே.சி.பிரதாபன், என்.முத்துகுமார், சீமென்.இரா. நரேஷ்குமார், எம்.பழனி, எம்.வி.நரசுமணி, ஏ.குமார், ஆர்.கோபிநாத், ஜி.கோதண்டராமன், க.பாலகிரு ஷ்ணன், தங்கராஜ், த.கு.பன்னீர்செல்வம், ஏ.கதிரவன், பி.சுதாகர், கே.கைலாசம், எஸ்.ராஜசேகர், ஆர்.பாரதி தாசன், ஏ.ஞானசேகர், இராயபுரம் ராஜ், ஆ.மணிவண்ணன், எஸ்.சூரியபிரகாஷ், ஜி.உமாபதி பீ.சத்தியநாராயணன், ஏ.சந்திரசேகர், ஆ.ரமேஷ், ஆர்.பி.சேகர், பா.சுரேகா, பாம்பே லட்சுமி, பீ.ஞானம், ஜி.பிரபு, மலர் பிரவீன், எஸ்.பரணி, மற்றும் கழகத்தினர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். கே.லட்சுமணன், என்.வெங்கட், பி.ரவிசங்கர், கா. ீதர், ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.

### மோசடிகளின் மொத்த உருவமாகக் காணப்படும் ‘நீட்’ தேர்வைப் புறந்தள்ளுவோமென்ற

# தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் கோரிக்கைக்கு ஒன்றிய அரசு செவி மடுக்க வேண்டும்!

## “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூலை 23-**

**மோசடிகளின் மொத்த உருவமாக காணப்படும் ‘நீட்’ தேர்வை புறம் தள்ளுவோம் என்கிற தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் கோரிக்கைக்கு எதிர்காலத்திலாவது ஒன்றிய அரசு செவி மடுக்க வேண்டும் என “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.**

அது வருமாறு:–

தொழில்நுட்ப படிப்புகளின் தரத்தை உயர்த்துவதும், அதில் சேர விரும்பும் மாணவர்களின் திறமைகளை எடைபோடும் வகையில் இருப்பதுதான் தேசிய அளவிலான பொது நுழைவுத்தேர்வுகளின் நோக்கமாகும். ஆனால் நீட் உள்ளிட்ட தேர்வுகள் அனைத்து விதமான மோசடிகளின் ஆணிவேராக உள்ளன. நடப்பாண்டுக்கான நீட் தேர்வு நாடு முழுவதும் 571 நகரங்களில் கடந்த மே 5ம் தேதி நடந்தது. இத்தேர்வை 23 லட்சத்து 33 ஆயிரத்து 297 பேர் எழுதினர்.

தேர்வெழுதியவர்களின் எண்ணிக்கையை கூட தேர்வு முகமையால் சரிவர தர முடியவில்லை. ஜூன் 4ம் தேதி தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நிலையில், மொத்தம் 13 லட்சத்து 16 ஆயிரத்து 268 பேர் தேர்ச்சி பெற்றனர். இந்த தேர்வில் இதுநாள் வரை இல்லாத அளவுக்கு 67 பேர் முழு மதிப்பெண்கள் பெற்றிருந்தனர். மேலும் நேரக்குறைபாடு சிக்கல்கள் காரணமாக 1563 பேருக்கு கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டன. வினாத்தாள் விற்பனை, ஆள் மாறாட்டம் என பல்வேறு முறைகேடுகள் இம்முறை நீட் தேர்வில் நடந்தேறின.

இதையடுத்து உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் குவிந்தன. தேசிய அளவிலான ஒரு நுழைவுத்தேர்வில் இத்தனை முறைகேடுகளா என மாணவர் சமுதாயமே கொந்தளித்தது. கோர்ட் தீர்ப்பின் அடிப்படையில் கருணை மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு, மீண்டும் மறுத்தேர்வு ஜூன் 23ம் தேதி நடத்தப்பட்டது. நீட் தகுதி தேர்வை ரத்து செய்துவிட்டு, மறுத்தேர்வு நடத்திட வேண்டும் என பல்வேறு கோரிக்கைகள்





எழுந்த நிலையில், உச்சநீதிமன்றம் அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டது.

அதேசமயம் நீட் தேர்வில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் மையங்கள் வாரியாக தேர்வு முடிவுகளை வெளியிட கோர்ட் உத்தரவிட்டது. இதிலும் பல பூதங்கள் வெளிவர தொடங்கியுள்ளன. குஜராத் மாநிலம் ராஜ்கோட், ராஜஸ்தான் மாநிலம் சிகார் ஆகிய தேர்வு மையங்களில் தேர்வு எழுதியோர் அதிகபட்ச தேர்ச்சி பெற்றது தெரிய வந்துள்ளது. ராஜ்கோட் மையத்தில் தேர்வு எழுதிய மாணவர்களில் 70 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குஜராத்தில் மட்டுமே 700 மதிப்பெண்களுக்கு மேல் 122 மாணவர்கள் பெற்றுள்ளனர். ராஜஸ்தானில் 700 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 482 ஆக உள்ளது. இதில் சிகார் பகுதியைச் சேர்ந்த 149 மாணவர்கள், நாட்டிலேயே அதிகபட்ச தேர்ச்சியை பெற்றுள்ளனர். மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களிலும் நல்ல தேர்ச்சியை மாணவர்கள் பெற்றிருப்பது, பா.ஜ. ஆளும் மாநிலங்களில் மருத்துவர்களை அதிகரிக்க திட்டமிட்டி ருப்பதாகவே தெரிகிறது.

நீட் முறைகேடுகள் அதிகம் நடந்த குஜராத், ராஜஸ்தான், உ.பி. மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் தேர்ச்சி விகிதமும் அதிகரித்திருப்பது பல்வேறு வினாக்களை எழுப்புகிறது. நீட் தேர்வுகளில் இவ்வாறு முறைகேடுகள் அதிகரித்தால், எதிர்காலங்களில் ஒருவர் பிளஸ்2 வரை பெயரளவுக்கு படித்துவிட்டு, நீட் தேர்வில் மட்டும் சாதித்து விட்டால், மருத்துவ கனவை நனவாக்கி கொள்ள முடியும். நல்ல மருத்துவராக ஒருவர் உயர்வதற்கும், நீட் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதற்கும் தொடர்புள்ளதா என்றால், நிச்சயமாக இல்லை.

பிளஸ்2 வரை ஒருவர் முதல் மதிப்பெண் பெற்றுவிட்டு, நீட் தேர்வு என்னும் தடை தாண்டும் ஓட்டத்தில் பின்தங்கும்போது, அவரது மருத்துவ கனவு பொசுங்கி விடுகிறது. மோசடிகளின் மொத்த உருவமாக காணப்படும் நீட் தேர்வை புறம் தள்ளுவோம் என்கிற தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் கோரிக்கையை எதிர்காலத்திலாவது ஒன்றிய அரசு செவிமடுக்க வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தாம்பரம் மாநகராட்சி தாம்பரம் மேற்கு மண்டலத்தலைவர் எஸ் இந்திரன் 48 ,64 ,69 ,70 ஆகிய வார்டுகளில் ஆய்வு மேற்கொண்டார். அங்கு பொதுமக்கள் வைத்த கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித் தந்திட அதிகாரிகளை அறிவுறுத்தினர் உடன் மாமன்ற உறுப்பினர்களும், மாநகராட்சி அதிகாரிகளும் உள்ளனர்

### அமைச்சர் சு.முத்துசாமி - என்.நல்லசிவம் முன்னிலை! ஈரோடு மாவட்டம் - முன்னாள் எம்.பி.

# வி.பி.சண்முகசுந்தரம் நினைவேந்தல் - படத்திறப்பு நிகழ்ச்சி!

## திருவுருவப் படத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி திறந்து வைக்கிறார்!

ஈரோடு, ஜூலை 23-

ஈரோடு மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடி - முன்னாள் எம்.பி. கோபி வி.பி.சண்முகசுந்தரம் அவர்களின் நினைவேந்தல் - திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி நாளை நடைபெறுகிறது என கோபி நகரக் கழகச் செயலாளர் என்.ஆர்.நாகராஜ் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து கோபி நகரக் கழக செயலாளர்,கோபி நகராட்சி தலைவர் என்.ஆர்.நாகராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஈரோடு வடக்கு மாவட்ட திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வி.பி. சண்முகசுந்தரம் அவர்களின் மறைவையொட்டி, நினைவேந்தல் மற்றும் படத் திறப்பு விழா நிகழ்ச்சி, நாளை (24.07.2024 - புதன்கிழமை) காலை 9.30 மணியளவில், கோபி, கொளப்பலூர் முதன்மை சாலையில்( வேட்டைக்காரன் கோயில்) உள்ள, வாசு சென்னியப்பா மஹால் திருமண மண்டபத்தில், நடைபெற உள்ளது.

இந் நிகழ்ச்சியில், திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள், தலைமையேற்று வி.பி.எஸ் அவர்களின் படத்தை திறந்து வைக்கிறார்.

இந் நிகழ்ச்சியில், எனது (கோபி நகர தி.மு.க. செயலாளர், கோபி நகராட்சி தலைவர் என். ஆர்.நாகராஜ்) வரவேற்புரையில், தமிழ்நாடு அரசு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர், சு.முத்துசாமி, ஈரோடு வடக்கு மாவட்ட திமுக செயலாளர் என்.நல்லசிவம் ஆகியோர் முன்னிலை வகித்து உரையாற்றுகிறார்கள்.

ஆகவே. இந் நிகழ்ச்சியில், மாநில, மாவட்ட, நகர நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள் வாக்குச் சாவடி ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச் சாவடி நிலை முகவர்கள், கழக முன்னாள் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய், தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### வி.ஜெ.உமாமகேஸ்வரன் ஏற்பாட்டில்

# திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் 50.ஆயிரம் மரக்கன்று நடும் நிகழ்ச்சி

## மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார்! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, பங்கேற்பு

திருவள்ளூர் ஜீலை 22;

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி திமுக சார்பில் முத்தமி ழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 50,000 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி புல்லரம்பாக்கம் கிராமத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி.ஜெ. உமாமகேஸ்வரன் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் ஒன்றிய கழகச் செயலாளர் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர். செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி மா.செ. ராஜேஷ், தெ.பிரியாகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ சிறப்புரையற்றி மரக்கன்று நடும் விழா தொடங்கி வைத்தார் இதன் முன்னதாக கழக கொடியேற்றி டாக்டர் கலைஞர் பேரறிஞர் அண்ணா பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

இதில் மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், பொதுகுழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.ஜெயசீலன், பிரேம் ஆனந்த், மாவட்ட கவுன்சிலர் டி.தென்னவன், ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்வாணன்,

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தியாகராஜன் ஆவடி மாநகர இளைஞரணி அமைப்பாளர் துர்கா பிரசாந்த் ஒன்றிய கழக நிர்வாகிகள் மனோகரன், வேலாயுதம், மதுரை வீரன், புன்னை குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் பி. கே.இ.கபிலன், காக்களூர் சரவணன், பி.கே.இ. நாகராஜன், விஜய் சாரதி, ஹரி கிருஷ்ணன், உதயநிதி ரசிகர் மன்ற மாவட்ட நிர்வாகி கிரண் குமார், மற்றும் சுமன், ராஜமோகன், ராஜாராம், பார்த்திபன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### விருதுநகர் வடக்கு மாவட்டம்

# சிவகாசி மாநகரப் பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல்!

## வேட்பு மனு தாக்கல்

விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரப் பொருளாளர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

**விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரப் பொருளாளர் பொறுப்புக்கு தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2024 ஜூலை 24 (புதன்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.**

**தகுதி விவரம்**

வேட்பு மனு முன்மொழிபவரும், வழிமொழிபவரும் மாநகரத்திற்கு உட்பட்ட வட்டச் செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகரப் பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

**வேட்புமனுக் கட்டண விவரம்**

**பொருளாளர் பொறுப்பு**

**பொறுப்புக்கு வேட்புமனுக் கட்டணம்... ரூ.5000/–**

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.500/ - கட்டணம் செலுத்தி தலைமைக் கழகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 20.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அமைக்கப்பட்ட பேவர் பிளாக் சாலையை திருவள்ளூர் மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் திறந்து வைத்தார். உடன் ஜெ.மூர்த்தி, எஸ்.ரமேஷ், கே.அபிராமிகுமரவேல், அப்துல்ரஷீத், கா.சு.ஜெகதீசன், ஜான்(எ)பொன்னுசாமி, கே.வி.லோகேஷ், க.சு.தமிழ்உதயன், குமரவேல், கோல்டுடி.மணி, வழக்கறிஞர்.சீனிவாசன், வெங்கடேசன், பார்த்திபன், கோகுல்கிருஷண்ன், ஜீவா, லோகநாதன், ஜெயராமன், எம்.கேசவன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.